KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.48

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

பதினெண் கீழ்க்கணக்கும் திருமாலும்

pathinenkilkanakku and Lord Vishnu

A. ARTHI[1,*iD], Dr. T. KUMAR[2]

[1] Ph.d Research Scholar, Reg No:232506A026, Department of Tamil, Government Arts College, C. Mutlur, Chidambaram - 608102, Affiliated to Annamalaiuniversity, Annamalai Nagar, Tamilnadu, India.
[2] Associate professor, Department of Tamil, Government Arts college, B.Mutlur, Chidambaram.
***Corresponding author:** A. ARTHI, arthiarulmozhidevan1218@gmail.com
ORCID iD: A. ARTHI https://orcid.org/0009-0008-9246-9530

ARTICLE INFO

Article history
Received: 12 October 2026
Revised: 15 October 2026
Accepted: 18 October 2026

Article ID
KIJTS-2026-0031

Peer review
Double-blind peer review

Keywords
Lord Vishnu
Avatars
Mythological Stories
Aram
Kadavul Vaazhthu
Worship

ABSTRACT

Although the Pathinenkilkanakku works composed during the Post Sangam period mostly expound on ethical values for living, they also serve as historical records to understand the religious elements of contemporary society. They highlight the moral values and way of life of Tamils. Concepts from various religions including Shaivism, Vaishnavism, Jainism, and Buddhism are featured in these texts. The primary objective of this paper is to analyze the devotional thoughts and mythological records regarding Lord Vishnu, one of the Supreme Trinity. This study explains how invocation sections in ethical works like Naanmanikkadikai, Thirigadugam, and Inna Narpathu describe the radiant appearance of Lord Vishnu, and how love (Akam) works like Kar Narpathu and Thinaimalai Nootraimpathu record the worship of Mayon (Vishnu) by the people of the Mullai (pastoral) region. Furthermore, this paper explores how the stories of Vishnu's avatars, such as Vamana and Krishna, have been used as similes across these literary works.

How to cite this article: A. ARTHI, & Dr. T. KUMAR (2026). பதினெண் கீழ்க்கணக்கும் திருமாலும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 575–585. https://doi.org/10.63300/kijts603112026.48
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

அ. ஆர்த்தி,

முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவுஎண்: 232506A026, தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, சி. முட்லூர், சிதம்பரம் - 608 102, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, அண்ணாமலை நகர், தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் தி.குமார்,

இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,அரசு கலைக் கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்.

ஆய்வுச் சுருக்கம்

சங்கமருவிய காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் வாழ்வியல் அறங்களை எடுத்துரைப்பினும் அக்கால சமூகத்தின் சமயக் கூறுகளை அறிந்து கொள்ளும் வரலாற்று ஆவணங்களாகவும் திகழ்கின்றன .தமிழர்களின் அறநெறி மற்றும் வாழ்வியலை எடுத்துரைக்கின்றன. இந்நூல்களில் சைவம், வைணவம்,சமணம் ,பௌத்தம் உள்ளிட்ட பல சமய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன .அவற்றுள் முப்பரம்பொருள்களில் ஒருவரான திருமால் குறித்த வழிபாட்டுச் சிந்தனைகளையும், தொன்ம பதிவுகளையும் ஆராய்வதை இக்கட்டுரை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. நான்மணிக்கடிகை, திரிகடுகம், இன்னாநாற்பது போன்ற அற நூல்களில் கடவுள் வாழ்த்து பகுதிகள் திருமாலின் தோற்ற பொலிவையும்,கார்நாற்பது , திணைமாலை நூற்றைம்பது போன்ற அகநூல்கள் முல்லை நில மக்களின் மாயோன் வழிபாட்டையும் எங்கனம் பதிவு செய்துள்ளன என்பதை இவ்வாய்வு விளக்குகிறது. மேலும் வாமனன், கிருஷ்ணன் போன்ற திருமாலின் அவதாரக்கதைகள் இந்நூல்களில் உவமைகளாகப் பயின்று வந்துள்ள விதங்களைப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றன .

திறவு ச்சொற்கள்

திருமால் , அவதாரங்கள் , புராணக்கதை ,அறம் ,கடவுள் வாழ்த்து ,வழிபாடு .

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலத்திற்குப் பிந்தைய காலம் சங்க மருவிய காலம் அல்லது இருண்டு காலம் என்று சிலரால் அழைக்கபடினும், அது உண்மையில் அறநெறிக்காலம் ஆகும். இக்காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களின் தொகுப்பே பதினெண்கீழ்க்கணக்கு எனப்படுகிறது. இந்நூல்கள் பெரும்பாலும் சமண, பௌத்த சமயங்களின் தாக்கத்தால் அறக்கருத்துக்களை முதன்மைப்படுத்தி எழுதப்பட்டவை என்ற பொதுவான கருத்து உண்டு. இருப்பினும் இவற்றில் வைணவ நெறியின் முதற்கடவுளான திருமால் பற்றிய வழிபாட்டுச் சிந்தனைகளைம், புராணக் கதைகளையும் காணமுடிகிறது. இக்கட்டுரை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருமால் எவ்வாறு போற்றப்படுகிறார் என்பதை ஆராய்கிறது.

நான்மணிக்கடிகையில் திருமால் வழிபாடு

மனித வாழ்விற்குத் தேவையான அறநெறிகள் பலவற்றைக் கொண்ட நூல் இது.ஒவ்வொரு பாடலிலும் மணியான நான்கு கருத்துக்களை பெற்றிருப்பதால் இந்நூல் நான்மணிக்கடிகை என்று அழைக்கப்படுகிறது.நான்மணிக்கடிகை பாடல்களின் மூலம் அக்காலத்து மக்களின் பழக்க வழக்கங்கள்,நம்பிக்கை,வாழ்வியல் முறை எனப் பல்வேறு செய்திகள் பற்றி அறிந்துகொள்ளமுடிகிறது. இதனை இயற்றியவர் விளம்பிநாகனார். நான்மணிக்கடிகையில் திருமால் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் மிகச் சிறப்பான முறையில் போற்றப்படுகிறார். இந்நூலின் முதற்கண் உள்ள கடவுள் வாழ்த்துச்

செய்யுட்கள் இரண்டும் மாயவனைப் பற்றியவை தெய்வத்தை வணங்கி செயலை தொடங்குதல் பண்டைய காலத்தில் இருந்தே வழக்கத்தில் இருந்துள்ளதைச் சங்கம் மருவிய இலக்கிய கடவுள் வாழ்த்துப் பாடலில் காணமுடிகிறது.

"மதிஎன்னும் மாயவன் வாள்முகம் ஒக்கும்

கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்

.....

புதுமலர் ஒக்கும் நிறம்" (நான்மணிக் கடிகை ,கடவுள் வாழ்த்து ,பக்.263)

என்றும், இதனை தொடர்ந்து திருமால் நீர்ப் பிரளயத்திலிருந்து காப்பாற்ற உலகத்தைத் தன் வயிற்றில் வைத்தார்.மாபலிச் சக்கரவர்த்தியின் செருக்கை அடக்க மூன்று அடிகள் வைத்து நிலம் முழுவதையும் கடந்தான், கிருஷ்ண அவதாரத்தில் பசுக் கூட்டத்தைக் காப்பாற்ற கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தான்,சோ என்னும் அரணையும் அழித்தான் என திருமாலின் பெருமைகளை கூறி இறைவனை வணங்கி பாடலை ஆரம்பித்தலை பார்க்க முடிகிறது .

இன்னாநாற்பதில் திருமால்

வாழ்க்கைக்கு இன்னது துன்பம் தரும் என்று கூறும் நாற்பது செய்யுள்களால் ஆன நூல் இது.இந்நூலை இயற்றியவர் கபிலர். இன்னா நாற்பது பாடல்கள் முழுவதும் எக்காலத்துக்கும் பொருந்தும் படியான அறநெறிகள் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் தனிமனித ஒழுக்க நெறியை வலியுறுத்திச் சமூகத்தின் வாழ்வியலை மேம்படுத்த உதவும் பல கருத்துக்கள் காணப்படுவது சிறப்பு. இந்நூலில் திருமால் வழிபாடு இடம் பெற்றுள்ளது. கடவுள் வாழ்த்தில் திருமால் இடம் பெற்றுள்ளார்.இது அக்காலத் தமிழ் மக்கள் வழிபட்டு வந்த மாயோன் (திருமால்) வழிபாட்டின் தொடர்ச்சியைக் காட்டுகிறது. முதல் பாடலான கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன், பலராமன், திருமால், முருகன் ஆகியோர்களை வணங்காதவர்களுக்கு துன்பம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பது பற்றி கூறும்போது

"சக்கரத்தானை மறப்பு இன்னா, ஆங்கு இன்னா"

(இன்னா நாற்பது ,கடவுள் வாழ்த்து ,பக்.282)

என்று இறைவனை வணங்கவில்லை என்றால் துன்பம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று கூறும் போது திருமால் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது .சக்கரத்தான் என்பது இங்கு திருமாலை குறிக்கிறது .

இனியவை நாற்பதில் திருமால் :

இனியவை நாற்பது என்ற நூலில் மனித வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய அறங்கள் கூறப்பட்டுள்ளன. மனித வாழ்க்கைக்கு நல்லது அல்லது இனிமையான செய்திகளை எடுத்துக் கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே இந்நூலில் நோக்கம்.இந்நூலின் ஆசிரியர் பூதஞ்சேந்தனார். இனியவை நாற்பதில் பூதம்

சேந்தனார் கடவுள் வாழ்த்துப் பாடலில் மும்மூர்த்திகளையும் வாழ்த்திப் பாடுகிறார். மும்மூர்த்திகளை வாழ்த்தி பாடும் பொழுது திருமாலை ,

"தொல்மாண் துழாய் மாலையானைத் தொழல் இனிதே "

(இனியவை நாற்பது ,கடவுள் வாழ்த்து,பக்.291.)

என பழமையான துளசி மாலை அணிந்த திருமாலை வணங்குதல் மிகவும் இனிது என்று குறிப்பிட்டுள்ளார் .தொல்மாண் துழாய் மாலையான் என்பது இங்கு திருமாலைக் குறிக்கிறது. இன்னா நாற்பதில் தெய்வத்தை வணங்கவில்லை என்றால் துன்பம் ஏற்பட வாய்புள்ளது என்றும் இனியவை நாற்பதில் கடவுளை வழிபடுவதால் ஏற்படும் நன்மை குறித்தும் கூறப்பட்டுள்ளது.

கார் நாற்பதில் திருமால்

பண்டைக்காலத் தமிழரின் அக வாழ்க்கையின் அம்சங்களை, தன்னைப் பிரிந்து வேற்றூர் சென்ற தலைவனின் வருகைக்காகக் காத்திருக்கும் தலைவியின் ஏக்கத்தினூடாகக் கார்காலப் பின்னணியில் எடுத்துக் கூறுகின்ற நூல் கார்நாற்பது. மதுரையைச் சேர்ந்த கண்ணங்கூத்தனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது . முல்லை நிலக் கடவுளான மாயோனுக்குரிய ஒரு திணைக்குரிய சிறப்புகளை மட்டுமே சிறப்பாக எடுத்துக் கூறும் கார்நாற்பதில் இயற்கையோடு இறைவனை இணைத்து பேசியுள்ளார். கண்ணங்கூத்தனாரின் கார்நாற்பதில்,தோழி தலைவிக்குப் பருவம் காட்டி தலைவன் வருகையை கூற வரும் பொழுது,

"பொருகடல் வண்ணன் புனைமார்பின் தார்போல "(கார் நாற்பது ,பா.1)

என்பதில் திருமால் திருமார்பில் அணிந்த பூமாலை என திருமால் பற்றிய செய்தி இடம் பெறுகிறது. கரையை மோதும் கடலின் நிறத்தை உடைய திருமாலின் மார்பில் இந்திரவில் போன்ற மாலை இருந்தது மாலைக் காலத்தில் வருவேன் என்று கூறிச் சென்ற தலைவர் இன்னும் வரவில்லை கார் காலத்தில் மேகங்கள் கூடி மழைத் துளிகளைப் பெய்கின்றன அதனால் தலைவர் வருவார் என்ற செய்தி உள்ளது.

கார்காலத்தின் இயற்கை நிகழ்வுகளையும் அக்காலத்தில் நிகழும் பண்பாட்டு நிகழ்வுகளையும் தலைவியின் மனநிலையோடு சேர்த்து கூறும் ஆசிரியர் திருமாலின் திருநாமங்களில் ஒன்றான பெருங்கடல் வண்ணன் (கடலின் நிறத்தை உடைய திருமால்)என திருமாலின் பெயரைக் கூறி அவர் மார்பில் அணிந்துள்ள மாலைப் போல, மாலைக்காலம் உள்ளது என தலைவன் வருகையை கூறும் பொழுது கார்காலம் வந்துவிட்டது தலைவர் வந்து விடுவார் என தலைவிக்கு கூறிய கண்ணங்கூத்தனார் மாயோனுக்குரிய மாலைப் பொழுதையும், கார்காலத்தையும் கூறி அவருடன் இயற்கையை ஒப்பிட்டு தலைவன் வருகையை கூறியுள்ளார் .

களவழி நாற்பதில் திருமால்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் புறப்பொருள் பற்றிய ஒரே நூல் களவழி நாற்பது. இதனை எழுதியவர் பொய்கையார் என்னும் புலவர்.இதிலுள்ள நாற்பது பாடல்கள்

அக்காலத்துப் போர்க்களக் காட்சிகளையும், சோழனும் அவனது படைகளும் புரிந்த வீரப் போர் பற்றியும் கவிநயத்துடன் எடுத்துக்காட்டுகிறது. இந்நூலில் அரசனை திருமாலுடன் ஒப்பிட்டு பேசி உள்ளனர் .அரசனைத் திருமாலுக்கு ஒப்பிட்டு வாழ்த்தும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இருந்த ஒன்றாகும் .இதனைப் பூவை நிலை என்று கூறுகிறார்,தொல்காப்பியர் மாயோனாகிய திருமாலுக்கு உரிய நிலைத்த பெருமையையும் ,அழியாத புகழையும் மண்ணோடு இணைத்து பாராட்டுவது பூவை நிலை ஆகும் .

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின் "(தொல்காப்பியம் ,புறத்திணை யியல் ,நூ.75.)

கடவுளாகிய திருமாலைப் பொருந்தி இருப்பது நிலைபெற்ற காத்தல் தொழில் .அதனை மண்ணுலக அரசர்க்கு உரியதாய்க் காட்டுவது புகழ் பொருந்திய பூவை நிலையாகும் .தொல்காப்பியத்தை தொடர்ந்து இதனை புறப்பொருள் வெண்பா மாலையிலும் கந்தழி என்னும் துறையில் காணலாம், உழிஞை வேந்தனைத் திருமாலாகக் கொண்டு புகழ்ந்துரைப்பது கந்தழி என்னும் துறையாகும் .இதன் தொடர்ச்சியையே களவழிநாற்பதிலும் காண முடிகிறது .

போர்க்களக் காட்சியை சித்தரிக்கும் களவழி நாற்பதில் சோழ மன்னன் கோச்செங்கணானுக்கும், சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் இடையே நடந்த போர்க்களக் காட்சிகளை விவரிக்கும் பொய்கையார் , சோழன் செங்கணான் தன் பகைவருடன் போர் செய்த போது நடைபெற்ற நிகழ்ச்சியுடன் திருமாலின் சிவந்த கண்களை ஒப்பிட்டு பேசியுள்ளார் இதனை,

"செல் சுடர் சேர்ந்த மலை போன்ற- செங்கண்மால் "

(களவழி நாற்பது ,பா.1)

என்று திருமால் போன்று சிவந்த கண்களை உடைய சோழன் பகைவர்களை அழித்த போர்க்களத்தில் தேரின் சக்கரத்தைத் துதிக்கையில் தூக்கி நிற்கிறது யானை அது விரிந்த வானத்தில் செல்லும் சூரியன் மாலையில் ஒரு மலையைச் சேர்ந்தது போல் இருந்தது என திருமால் போன்று சிவந்த கண்களை உடைய சோழன் என்ற உவமை கூறப்பட்டுள்ளது.

சோழனின் ஆற்றலுடன் திருமாலின் சிவந்த கண்களை ஒப்பிட்டு பேசிய பொய்கையார் களவழி நாற்பதின் அடுத்த பாடலில் திருமாலின் சினத்தை சோழனின் ஆற்றலுடன் ஒப்பிட்டு பேசுகிறார்.இதனை,

"செங்கண் சின மால் பொருத களத்து" (களவழி நாற்பது ,பா.15.)

இதில், சோழன் சினம் கொண்ட திருமால் போன்று போரிட்ட களத்தில், காற்று கடுமையாக வீசியதால் சோலையில் இருந்த மயில் கூட்டம் பயந்து ஒவ்வொரு திசை நோக்கி ஓடுவது போல போரில் இறந்துபட்ட வீரர்களின் மனைவிமார்கள் தம்

கணவரின் உடல்களைத் தேடி நான்கு திசைகளிலும் ஓடி அலைந்தனர் என்று சோழன் சினம் கொண்ட திருமால் போன்று போரிட்ட களத்தில் காற்று வீசியது

என்ற உவமை கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக களவழி நாற்பதில் போர்க்களக் காட்சியில் சோழன் செங்கணனான் ஆற்றலுடன் திருமாலின் சிவந்த கண்களையும், சினத்தையும் சிறப்பித்து ஒப்பிட்டு பேசியுள்ளார்.

ஐந்திணை ஐம்பதில் திருமால்

இது முல்லை, குறிஞ்சி, மருதம் ,பாலை, நெய்தல் என்ற அடைவில் ஐந்திணைக்கும் பத்து பத்துப் பாடல்களைப் பெற்றுள்ள நூல் ஆதலின், இதனை ஐந்திணை ஐம்பது என்று குறிக்கின்றனர் மாறன்பொறையனார் எழுதிய இந்நூலில் முல்லைத் திணையின் முதற்பாடலில்,

" மல்லர்க் கடந்தான் நிறம் போன்று இருண்டெழுந்து "

(ஐந்திணைஐம்பது,பா.1)

என்று தலைமகளைத் தோழி பருவம் காட்டி வற்புறுத்தியபோது வீரர்களை வென்ற கண்ணனது கரிய நிறத்தை இருளுடன் உவமைப்படுத்தி கூறியுள்ளார்.

திணைமாலை நூற்றைம்பதில் திருமால் :

கீழ்க்கணக்கில் அமைந்த ஐந்திணை நூல்களில் அளவால் பெரியது இதுவே குறிஞ்சி,நெய்தல், பாலை,முல்லை, மருதம் என்னும் வரிசையில் ஐந்திணைகளை இந்நூல் முறைப்படுத்தியுள்ளது. கணிமேதாவியார் இயற்றிய திணைமாலை நூற்றைம்பது பாடல்களில் திருமால் பற்றிய செய்திகள் இடம்பெறுகிறது.இதில் கண்ணனையும் பலராமனையும் இயற்கையோடு இணைத்தும், பலராமனை தனியாகவும் பாற்கடல் கடைந்த நிகழும் இந்நூலில் சிறப்பித்து கூறப்பட்டுள்ளது.

கண்ணனும், பலராமனும் இந்து புராணங்களில் வரும் சகோதரர்கள். கிருஷ்ண அவதாரத்தில் கிருஷ்ணனின் சகோதரனாகக் காட்டப்படும் பலராமன் உழவுத் தெய்வமாக போற்றப்படுகிறார். இவ்விருவரையும் இணைத்து கணிமேதாவியார் பாடுகிறார். இதனை,

"மாயவனும் தம்முனும் போலே, மறிகடலும்

கானலும் சேர்வெண் மணலும் காணாயோ- கானல்"

(திணைமாலை நூற்றைம்பது,பா.58.)

இதில், கண்ணனும் பலராமனும் போலக் காணப்பெறும், அலைகடலையும் கடற்கரைச் சோலையில் அதனைச் சார்ந்த வெண்மணலையும், சோலையின் நடுவே நிறைந்துள்ள கோங்கமரங்களையும், தாழைமரங்களையும், பக்கங்களிலெல்லாம் நிறைந்துள்ள புன்னை மரங்களையும் விரும்பிப் பார்ப்பாயாக என்று தலைவனுக்கு பகற்குறியிடத்தைத் தோழி உணர்த்தினாள். இதில், தலைமகற்குத் தோழி பகற்குறி

நேர்ந்து இடம் காட்டிய போது கண்ணனையும், பலராமனையும் அலைகடலுடனும்,வெண்மணலுடனும் உவமைப்படுத்தி சிறப்பித்து கூறியுள்ளார்.

திணைமாலை நூற்றைம்பதில் கண்ணனையும்,பலராமனையும் இயற்கையோடு இணைத்து பேசிய ஆசிரியர் 145வது பாடலில் பாற்கடல் கடைந்த நிகழ்வினை மந்திரமலையின் சிறப்பினை இந்திரன் பெற்ற மகனுடன் ஒப்பிட்டு சிறப்பித்து பேசுகிறார். இதனை,

" கோட்டு அரவம்,இன்னிவை தாம் குழுமகோட்டு அரவம்,

மந்திரம் கொண்டுஓங்கல் என்ன, மகச் சுமந்து

இந்திரன்போல் வந்தான், இடத்து"(திணைமாலை நூற்றைம்பது,பா.145.)

என்று, பாக்களைப் பாடுகின்ற ஒலியும் இன்னிசையாகிய ஒலியும், வளைதல் இல்லாத கொம்புக் குழலின் ஒலியும் இவைபோன்ற பல ஒலிகளும் கூடி ஒலிக்கச் செய்கின்ற சிறப்பில் உள்ள தலைவன், வளைந்த நஞ்சுப்பற்களையுடைய வாசுகி என்னும் பாம்பினைக் கொண்டு பாற்கடலைக் கடைந்த மந்திரமலையானது மேற்கொண்டு சிறப்புப்பெற்றது போலத் தன்மகனை மேற்கொண்டு மருதநிலத் தெய்வமான இந்திரனைப் போல் தலைவியின் இடப் பக்கத்தில் வந்து சேர்ந்தான் என்று, தோழி கூறி மகிழ்ந்தாள் என்ற செய்தி உள்ளது.

பழமொழி நானூற்றில் திருமால்:

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மூன்றாவது நூலாக பழமொழி நானூறு குறிக்கப்படுகிறது. திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.பழமொழியை உருவாக்கிய புலவர் முன்றுறை அரையனார் தமிழ்நாட்டின் வரலாறுகள் பல பழமொழிநானூறின் வழியாகத் தெரிய வருகின்றன. பழமொழி நானூற்றில் திருமாலின் பல அவதாரங்கள் பழமொழிகளோடு சேர்த்து கூறப்பட்டுள்ளது ,

மன்னன் மாபலின் செருக்கடக்கத் திருமால் வாமன வடிவம் எடுத்தார். இதனை பழமொழி நானூற்றில்,

"ஆஅம் எனக்கு எளிது என்று, உலகம் ஆண்டவன்

மேஎந் துணை அறியான், மிக்கு நீர்பெயது, இழந்தான்"

(பழமொழி நானூறு ,பா.54.)

உலகம் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் ஆண்டவன் மாவலி அவனும் பின் வந்து நடக்கப் போகின்ற தன் நிலையை ஆராய்ந்து அறியாதவனாயினான் எனக்கு எல்லாம் முடியும் எனக்கு எல்லாம் எளிதே என்று தன் குருவான சுக்கிரர் தடுத்தும் கேளாமல் செருக்கினால் மிகுந்து இரந்து வந்த வாமனனுக்கு மூன்றடி மண் நீர் வார்த்துக் கொடுத்தான். அதன் பயன் அனைத்தையுமே இழந்து விட்டான் ஆதலால் குற்றமுடைய ஒரு செயலைச் செய்யத் தொடங்குபவர்களுக்குத்தாமே தமக்குக் கொண்டுவராத துன்பங்களே இல்லையாகும். குற்றமுள்ள செயலிலே ஈடுபட்டவர்

தமக்குத் தாமே துன்பத்தைத் தேடிக்கொள்ளும் அறியாமை உடையவர்கள் என்று இறைவனின் வாமன அவதாரத்தை கூறி அதன் மூலம் தற்பெருமை அழிவையே தரும் என்கிறார் .

மோகினி மயக்கத்தின் தெய்வம். மோகினி திருமால் எடுத்த ஒரு பெண் அவதாரம் இவ் அவதாரம் பற்றிய செய்திகள் மகாபாரதம் மற்றும் பாகவதம்,பரிபாடல் ஆகிய நூல்களில் குறிப்பு உள்ளது. ஒரு காலத்தில் வாளாற்றல் உடையவனாகிய திருமாலைக் கொல்லும் பொருட்டு மது,கைடவர் என்போர் வளைத்துக் கொண்டார்கள் அப்போது திருமால் தன்னுடைய திருமேனியின் விளங்குதல் பொருந்திய பேரொளியைக் காட்டவும், ஒப்பற்ற அந்த வடிவழகின் தன்மையைக் கண்டு அவர்கள் தம் நினைவைக் கைவிட்டார்கள். உருவப்பொலிவு ஒருவனுக்கு வெற்றியைத் தேடித்தரும் என்பதை அறியமுடிகிறது . இதனை,

"வாட்டிற லானை வளைந்தார்கள் அஞ்ஞான்று

வீட்டிய சென்றார் விளங்கொளி.... காட்டப்

பொருவறு தன்மை கண்டு அஃதொழிந்தார் அஃதால்

உருவு திருவூட்டு மாறு"(பழமொழி நானூறு ,பா.80)

உருவத் தோற்றத்தின் சிறப்பு திருமாலின் அவதார சிறப்பின் மூலம் சொல்லப்பட்டுள்து.

திருமால் நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் எடுத்த தோற்றங்களுள் கண்ணன் அவதாரமும் ஒன்றாகும். கம்சனை அழித்ததோடு கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்குல மக்களையும் காத்தவர் கிருஷ்ணர்.இதனை முன்றுறை அறையனார் பழமொழிகளைக் கூறும் பொழுது

" பல் ஆ நிறைப் புறம் காத்த நெடியோனே"

(பழமொழி நானூறு ,பா.81.)

என்றும்,

"ஆவிற் கரும்பனி தாங்கிய மாலையும்

கோவிற்குக் கோவலன் என்றுலகம் கூறுமால் "

(பழமொழி நானூறு ,பா.234)

என்றும், பசுக்களின் துன்பத்தைப் போக்க கோவர்த்தன கிரிமலையைக்

குடையாகக் கவித்த கண்ணனையும் தனது பாடலில் கூறியுள்ளார்.

இராமாவதாரத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"பொலந் தார் இராமன் துணையாகப் போதந்து

இலங்கைக் கிழவற்கு இளையான், இலங்கைக்கே"

(பழமொழி நானூறு ,பா.327.)

அழகிய மாலையினை அணிந்த இராமனைத் தனக்குப் படைத்துணையாகக் கொண்டு சென்று இலங்கைக்கு உரிய இராவணேசுவரனுக்கு இளையவனான விபீஷணன் இலங்கைக்கே மீளவும் சென்று அதற்கு அரசனாகும் பதவியையும் பெற்றனன். ஆதலால், வலிமையில் பெரியவரைச் சார்ந்திருந்து, அதன் சார்பினாலே பயன் பெறாதவர் என்று எவரும் இல்லை என இராமாயணக் கதை கூறி இராமனையும் பாடல்கள் வழி குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பழமொழி நானூற்றில் திருமாலின் பல அவதாரங்கள் பற்றிய செய்திகள் பேசப்பட்டுள்ளன .

திருக்குறளில் திருமால்

சமயக்கணக்கர் மதிவழிச் சென்று எந்தக் கடவுளையும் சிறப்பித்துப் பேசாத ஒரு நூல் திருக்குறள் ஆகும். அந்நூலிலும் திருமால் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மன்னன் மகாபலியின் செருக்கினை அடக்க திருமால் எடுத்த வாமன அவதாரத்தை திருக்குறளில்,

"மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்

தாஅயது எல்லாம் ஒருங்கு"(திருக்குறள் ,610.)

மூன்று அடிகளால் இவ்வுலகம் முழுவதையும் கடந்து வாமனன் போன்று சோம்பல் இல்லாத முயற்சியுடன் மன்னன் நினைத்ததை எல்லாம் பெறுவான் என்று ச.வே.சுப்ரமணியன் உரை தருகிறார். இது குறித்து மு.வரதராசனார் தன் உரையில் கூறுவதாவது அடியால் உலகத்தை அளந்த கடவுள், தாவிய பரப்பு எல்லாவற்றையும் சோம்பல் இல்லாத அரசன் ஒருசேர அடைவான் என்றும், இக்குறலுக்கு உரை ஆசிரியர்கள் உரை தந்துள்ளனர் .

அடுத்து 1103 வது குறளில் தாமரைக் கண்ணன் என்பதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கம்.

" தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்

தாமரைக் கண்ணான் உலகு?" (திருக்குறள் ,1103.)

இக்குறளில் தாமரைக் கண்ணான் என்பது திருமாலைக் குறிக்கிறது. இக்குறளுக்கான உரையாசிரியர்கள் உரை குறித்து காணலாம்.

பரிமேலழகர் தன் உரையில் கூறுவதாவது தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்- ஐம்புலன்களையும் நுகர்வார்க்குத் தாம் விரும்பும் மகளிர் மெல்லிய தோளின்கண் துயிலும் துயில் போல வருந்தாமல் எய்தலாமோ தாமரைக் கண்ணான் உலகு-அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம். அதாவது செங்கண்மால் என்பது திருமாலின் உலகம் என்று குறிக்கப்படுகிறது .

திரிகடுகத்தில் திருமால்

திரிகடுகம் என்பது மூன்று மருந்துப்பொருட்களைக் குறிக்கும். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூலிகைகள் உடலுக்கு நன்மை செய்வது போல் இதிலுள்ள பாடல்கள்

ஒவ்வொன்றிலும் கூறப்பட்டுள்ள மூன்று நீதிகள் மனிதனின் அறியாமையாகிய நோயைப் போக்கி வாழ்க்கையை செம்மை பெற உதவுமென்றதால் இந்நூல் திரிகடுகம் எனப்படுகிறது. இதன் ஆசிரியர் நல்லாதனார். இந்நூலின் காப்புப் பாடலில் திருமால் பற்றியும், அவர் செய்த சில செயல்களையும் குறிப்பிடுகிறார். உலகை அளந்ததும்,குருந்த மரத்தை சாய்த்ததும், மாயச்சகடம் உதைத்ததும் ஆகிய திருமாலின் செயல்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை,

" கண்அகல் ஞாலம் அளந்ததூஉம், காமருசீர்த்

தண்நறும் பூங்குருந்தம் சாய்த்த தூஉம், நண்ணிய

மாயச் சகடம் உதைத்ததூஉம்- இம்மூன்றும்

பூவைப்பூ வண்ணன் அடி"(திரிகடுகம் ,கடவுள் வாழ்த்து ,பக்.388)

அகன்ற இடமாகிய இந்த நிலவுலகத்தை அளந்ததும், விருப்பத்தை தரும் குளிர்ந்த நறுமணமுடைய மலர்கள் மலர்ந்துள்ள குருந்த மரத்தை முறித்ததுவும்,நெருங்கி வந்த வஞ்சகமான வண்டியை உதைத்ததும் என்ற இம் மூன்றையும் செய்த காயாம்பூவைப் போன்ற கரிய நிறமுடைய திருமாலின் திருவடிகள் ஆகும் என்று கூறுகிறார்.

இதில் திருமாலின் மூன்று செயல்களான உலகை அளந்ததும், குருந்த மரத்தை முறித்ததும், வஞ்சகமாக வந்த வண்டியை உதைத்ததும் என மாயவனின் செயல்களை கூறி திருமாலின் திருவடிகளே எனக்கு அடைக்கலம் என திருமாலின் திருவடிச் சிறப்பும் கூறப்பட்டுள்ளது.

ஆசாரக்கோவையில் திருமால்

ஆசாரக்கோவை என்பது பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரு நீதி நூல்

ஆகும். இது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒழுக்கங்களை எடுத்துரைக்கும் நூலாகும். இந்நூல் இளமையிலிருந்தே நல்ல பழக்க வழக்கங்களைக் கடைபிடிப்பதன் மூலம் நற்பண்புகள் வளர வழிவகுக்கும் என்பதை வலியுறுத்துகிறது.தினசரி வாழ்வில் கடைபிடிக்க வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை என தெளிவாகக் கூறுகிறது.இதன் ஆசிரியர் பெருவாயின்முள்ளியார். இதில் திருமாலுக்குரிய நாட்களாகிய திருவோணம் குறித்த செய்தி கூறப்பட்டுள்ளது. இதனை,

"மிக்க இருதேவர் நாளோடு, உவாத்திநாள்....."

(ஆசாரக்கோவை ,பா,43.)

ஆசாரக்கோவையில் ஒழுக்கம் பற்றி தொகுத்து கூறும் ஆசிரியர் கணவன், மனைவி சேர்ந்திருக்கக் கூடாத நாள்களை பற்றி பேசும் போது இரு தேவர்களான சிவபெருமான், திருமாலுக்குரிய நாட்களாகிய திருவாதிரை, திருவோணம் நாட்களில் கணவன், மனைவி சேர்ந்திருக்க கூடாது எனக் கூறுகிறார். இதில் திருமாலுக்குரிய திருவோணம் நாள் பற்றிய குறிப்பு இப்பாடலில் உள்ளது.

இன்னிலையில் திருமால்

இன்னிலை என்பது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றெனவும் இல்லை எனவும், இரண்டு வகை கருத்துகள் தமிழறிஞர்களிடம் உண்டு. இது அறம், பொருள்,இன்பம், வீடு என்னும் நாற்பொருள் மேல் 45 வெண்பாப் பாடல்களைக் கொண்ட ஒரு நூல்.இதன் ஆசிரியர் பொய்கையார். இந்நூலில் திருமாலின் கண்ணன் அவதாரம் பற்றிய குறிப்பு உள்ளது.

பாரதப் போர் உருவாக காரணமாக இருந்த கண்ணனை இன்னிலையில்,

"அன்று அமரில் சொற்ற அறவுரை வீழ் தீக்கழுது

மன்றுயர்ந்து போந்த வகை தேர்மின்- பொன்றா

அறம் அறிந்தோன் கண்ட அறம் பொருள் கேட்டல்லல்

மறமொறுக்க வாய்த்த வழக்கு "(இன்னிலை,பா.1)

என்று, முற்காலத்தில், பாரதப்போரில் கண்ணன் அருச்சுனற்குக் கூறிய கீதையாகிய அறவுரையை விரும்பிக் கேட்ட கொடிய பேயானது அறிவால் உயர்வுற்று ஆன்றோரவையைப் போய்ச் சேர்ந்த வகையை ஆராய்வீர், அழியாத தருமங்களையுணர்ந்தோன் அறிந்து கூறிய அறநூலினையும் பொருள் நூலினையும் நீங்கள் கேட்டு, துன்பத்தை விளைக்கும் பாவங்களை நீக்குக பொருந்திய நன்னெறி இதுவேயாம் என கண்ணன் அர்ச்சுனனுக்கு கூறிய கீதையாகிய அறவுரையை கேட்டு கொடிய பேயானது அறிவால் உயர்ந்து மனிதனாக மாறியதாம் அதேபோல் மனிதனும் சான்றோரின் அறவுரையைக் கேட்டு பாவங்களை நீக்கி நன்னெறியில் வாழ வேண்டும் என கூறும் போது கண்ணன் அவதாரத்தில் அவர் போதித்த அறிவுரைகளோடு சான்றோரின் அறிவுரைகளை ஒப்பிட்டு ஆசிரியர் கூறுகிறார்.

முடிவுரை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சமண, பௌத்த சமய நெறிகளை சார்ந்து அறத்தை போதிக்க எழுந்தவை என்ற போதிலும் அவை அக்காலகட்டத்தில் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த வைணவச் சிந்தனைகளையும் திருமால் வழிபாட்டையும் நமக்கு தெரிவிக்கின்றன .திருமாலின் உலகளந்த அவதாரம் மற்றும் கிருஷ்ண அவதாரக்கதைகள் இக்காலத்து மக்களிடம் பெருவழக்காக இருப்பதை இந் நூல்கள் மெய்ப்பிக்கின்றன. பக்திஇயக்கம் ஆழ்வார்கள் காலம் தோன்றுவதற்கு முன்னரே தமிழ் நெஞ்சங்களில் திருமால் வழிபாடு அறத்தோடு இணைந்து பயணித்துள்ளது என்பதை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் நமக்கு தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன. சங்க இலக்கியங்களில் மாயோன் என்று போற்றப்பட்ட திருமால் சங்கமருவிய கால கீழ்க்கணக்கு நூல்களில் அவதார புருஷனாகவும், உலகை காக்கும் பரம்பொருளாகவும், அறத்தின் காவலனாகவும் உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். தமிழ் இலக்கிய பரப்பில் திருமால் வழிபாடு சங்க காலத்தை தொடர்ந்து செல்வாக்குடன் இருந்ததையும் திருமால் வழிபாட்டின் தொடர்ச்சியையும் நாம் அறிந்து கொள்ளலாம் .

துணைநூற்பட்டியல்

References

இராசமாணிக்கம் பிள்ளை ,ம,(உ.ஆ)-பதினெண் கீழ்க்கணக்கு மூலமும் உரையும், பழமொழி நானூறு, கழக வெளியீடு ,சென்னை, 2007.

இராமநாதன் ,சுப.(ப.ஆ) - புறப்பொருள் வெண்பாமாலை , அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியீடு, முதற் பதிப்பு -2003.

சுப்பிரமணியன் ,ச.வே. - பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை ,நான்காம் பதிப்பு-2022.

திருஞானசம்பந்தம் ,ச . - தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ,கதிர் பதிப்பகம் , திருவையாறு, முதற்பதிப்பு -2020.

ஜெகத்ரட்சகன் ,எஸ் - செந்தமிழ் இலக்கியத்தில் திருமால் ,ஆழ்வார்கள் ஆய்வு மையம் ,சென்னை ,இரண்டாம் பதிப்பு -2009.